From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.80 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramkumar | Father/Husband Name | : Ayyanan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 04.04.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் கல்லம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ரப்பர் பேக்டரியில் ஆப்பரரேட்டராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யணன் எனது அப்பா. இவ்வழக்கின் விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்த்ததில்லை. சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் சொன்னதன்பேரில் அவரின பெயர் கணேசன் என்று தெரியும். கடந்த 30.05.19ம் தேதி காலை 11 மணிக்கு நான் கம்பெணியில் வேலை செய்துகொண்டிருந்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த ஜெயச்சந்திரன் மற்றும் செந்தில் ஆகியோர் நேரில் வந்து விபத்து நடந்த விவரம் சொல்லி மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனியல் நான் என் அப்பாவை பார்த்தபோது தலையில் கட்டுப்போட்டு மயக்கமாக இருந்தார். பிறகு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். சம்பவம் இடத்தில் இருந்த நபருக்கு விசாரித்து மனு எழுதுபவரிடம் சொல்லி மனு எழுதி படித்துக்காட்டியபின் நானும், என் அக்கா பேச்சியம்மாளும் கையெழுத்து செய்து போலீசில் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த என் அப்பா ஒருவாரம் மருத்துவமனியல் உள்நோயாளியாக இருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 06.06.19ம் தேதி இறந்துவிட்டார். புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவத்தைபற்றி எனக்கு சொன்னவாக்ள்

10.30 மணியிலிருந்து 1045 மணிக்குள் சொல்லியிருப்பார்களா என்றால் 10.30 மணியிலிருந்து 11 மணிக்குள். நான் வேலை பார்க்கும் இடத்திற்கும் சம்பவ இடமான முனிக்கோவிலுக்கும் எத்தனை கி.மீ. என்றால் இரண்டரை கி.மீ. புகாரை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் படித்து காட்டினார்கள். சம்பவ இடத்திலிருந்து நான் வேலை பார்க்கும் இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றால் எவ்வளவு நேரத்தில் வரலாம் என்றால் 10 நிமிடத்தில் வரலாம். நான் புகாரில் 10.45 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் இறக்கும்போது எத்தனை வயதிருக்கும் என்றால் 65 வயது. வயோதிகத்தின் காரணமாக என் தகப்பனாருக்கு காது சரியா கேட்காது என்றால் சரியல்ல, நன்றாக கேட்கும். நான் அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் வடக்கிலிருந்து தெற்குநோக்கி கல்லம்பட்டி நோக்கி செல்லும்போது நடுவில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும்போது விபத்து நடு ரோட்டில் நடந்ததாக கேள்விப்பட்டேன். என் சைக்கிளை உருட்டிக்கொண்டுதான் சாலையை கடந்தார் என்றால் சரிதான், அவ்வாறுதான் சொன்னார்கள். மேலூரிலிருந்து கல்லம்பட்டிக்கு செல்லவேண்டுமென்றால் விநாயகபுரம் சென்று அதன்பி திரும்பி வரவேண்டும் என்றால் பல்க்கிற்கு முன்பாகவும் ஒரு பாதை உள்ளது. அந்த பாதை சூரக்குண்டு மற்றும் கல்லம்பட்டி மக்களும் செல்வதற்காக தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட பாதை என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொன்ன நேரத்தில், இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.80 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Senthilkumar | Father/Husband Name | : Periyakaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 04.04.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் கல்லம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் வெளிநாட்டில் வேலை பார்க்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை சம்பவத்தன்று பார்த்திருக்கிறேன், அவர் பெயர் எனக்கு தெரியாது. அதன்பிறகு எதிரியை இன்றுதான் பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அய்யணன் என்பவரை பார்த்திருக்கிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தபோது எங்கள் ஊரில் ஒரு நபர் இறந்துவிட்டார், அவர இறுதி சடங்கிற்கு வானவெடி வாங்குவதற்காக நானும் ஜெயச்சந்திரன் என்பவரும் சென்றுவிட்டு திரும்பி வரும்போது முனிக்கோயில் அருகிலுள்ள பெட்ரோல் பங்க் முன்பாக சம்பவ இடத்தின் அருகிலுள்ள ஒரு பாலத்தின் அருகே சைக்கிளுடன் வந்த அய்யணனை பார்த்துவிட்டு நான் வந்துகொண்டிருந்தபோது, ரோட்டை தாண்டி சூரக்குண்டு விலக்கு அருகே நின்றுகொண்டிருந்தபோது மேலூரிலிருந்து மதுரை நோக்கி சென்ற கார் வேகமாக வந்து அய்யணன்மீது மோதிவிட்டு பெட்ரோல் பங்கின் அருகிலுள்ள டீ கடை முன்பு நின்றது. காயம்பட்ட நபரை பார்த்தபோது அவருக்கு தலையில் அடிபட்டு இரத்தக்காயத்துடன் இருந்தார். அவரை ஆம்புலன்சில் ஏற்றி மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு காயம்பட்டவரின் உறவினர்களிடம் தகவல் சொல்ல வீட்டிற்கு சென்றேன். பெண்கள் மட்டுமே இருந்ததால் அ.சா.1 வேலை செய்யும் கம்பெணிக்கு சென்று அ.சா.1யிடம் தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை:

எத்தனை வருடங்களாக நான் வெளிநாட்டில் வேலை செய்தேன் என்றால் 13 வருடங்களாக, என்ன வேலை செய்தேன் என்றால் மெக்கானிக்காக. சூரக்குண்டு விலக்கில் 100க்கும் மேற்பட்ட விபத்துக்களை நான் பார்த்துள்ளேன் என்றால் அந்த அளவிற்கு பார்த்ததில்லை, ஆனால் நிறைய பார்த்திருக்கிறேன். மேலூரிலிருந்து கல்லம்பட்டி, சூரக்குண்டு போகவேண்டும் என்றால் விநாயகபுரம் சென்றுதான் திரும்பி வரவேண்டும் என்றால் அப்படித்தான் போட்டிருந்தார்கள், அனால் வசதிக்காக அரசாங்கமே பெட்ரோல் பங்க் எதிரில் வழி அமைத்துக்கொடுத்திருந்தனர், அந்த வழியாக அரசு பேருந்தே வரும். நான் சூரக்குண்டு விலக்கிலிருந்து சம்பவத்தை எவ்வாறு பார்த்தேன் என்றால் கார் வேமாக வந்தது டம் என்று சத்தம்கேட்டு பார்த்தேன், அய்யனார் காயம்பட்டு கீழே கிடந்தார். ரோட்டின் இருபுறங்களிலும் பேரிகார்டு வைத்திருந்தர்கள் என்றால் தற்சமயம் அதுபற்றி தெரியாது. தற்சமயம் அதுபற்றி சம்பவம் நடந்து 3 வருடங்கள் ஆனதால் என்னால் அப்படியே சொல்ல இயலவில்லை. காரின் ஹாரன் சவுண்டு எனக்கு கேட்டதா என்றால் இல்லை, விபத்தில் சத்தம்தான் கேட்டது. விபத்தில் இறந்துபோன அய்யணன் சாலையை எவ்வாறு கடந்தார் என்றால் அவர் எப்பொழுதும் சைக்கிளிலிருந்து இறங்கி சைக்கிளை உருட்டிக்கொண்டுதான் சாலையை கடப்பார். கார் ரோட்டின் நடு பகுதிக்கும் வடக்கேதான இருந்தது என்றால் விபத்திற்கு முன்பு பார்க்கவில்லை, விபத்திற்கு பின்பு சைக்கிள் வடக்கே தார் ரோட்டில் மண்ரோட்டை ஒட்டி கிடந்தது. கார் ரோட்டில் வலதுபுறம் நின்றது. சாட்சி தற்போது 2 வாகனங்களுமே தெற்குப்புறம் நின்றது என்று கூறுகிறார், தான் ரோட்டை கடந்து வலதுபுறம் நின்றதால் வடக்கே என்று சொல்லிவிட்டேன் என்று கூறுகிறார்.) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் 25 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் டீ கடை உள்ளதால் ஆட்கள் நிறைய இருந்தார்கள். அவர்களை போலீசார் விசாரித்தனர் என்றால் சரிதா். நெடுஞ்சாலை ரோந்து காவலர்கள்தான் அவர்களை விசாரித்தனர் என்றறல் சரிதான். சம்பவத்தன்று காலை 10.45 மணிக்கு நான் புகார்தாரை அழைத்துச்சென்றேன் என்ால் அதற்கு மேலாக இருக்கும். சம்பவ இடத்திலிருந்து அ.சா.1 பேக்டகரிக்கு எவ்வளவு தொலைவு என்றால் 4 கி.மீ. தூரம் இருக்கும் இருசக்கர வாகனாத்திலன் சென்றால் எவ்வளவு நேரத்தில் சம்பவ இடத்திலிருந் அ.சா.1 வேலை செய்யும் இத்திற்கு செல்ல ஆகும் என்றால 10லிருந்து 15 நிமிடங்கள். என்னையும் ஜெயச்சந்திரனையும் எந்த போலீசாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இறந்தவர் என் உறவினர் என்றால் சரிதான், அவர் என் பெரியப்பா. நான் சொன்ன மாதிரி, விதத்தில்,

இடத்தில், நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.